# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத்**

**திங்கள் வெளியீடு**

| துணர் ௫௪ | திருவள்ளுவர் யாண்டு ௨௲௧௧<br>இரௌத்திரி வைகாசி<br>1980 மே - ஜூன் | மலர் ௨ |
| --- | --- | --- |


## 'குற்றிளையர்'


நெல்லை. ந. சொக்கலிங்கம். எம். ஏ., டி. ஜி. டி.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.


இன்று ஓரளவு வசதியுள்ளவர்கள் இல்லங்களில் எடுபிடி வேலை செய்வதற்குக் குற்றேவல் புரிவாரை அமர்த்திக் கொள்வர். இதுபோன்று சங்ககாலச் சமுதாயத்தில் குற்றேவலர்களை இல்லங்களில் அமர்த்தியிருந்தனர் அவர்களுக்கு இடப்பட்ட பணிகள் யாவை, அவர்கள் எந்நிலையில் நடத்தப்பட்டனர் என்றும் அறிவோம்.

### பிசிராந்தையார் கூறிய இளையர் ஏவலரே!

பண்டைநாளில் இல்லங்களில் பணியமர்த்தப்பட்ட ஏவலர்களைக் குற்றிளையர், குற்றேவலர், ஏவலர், இளையர், தொழுவர், அடியோர், என அழைத்தனர். இவர்களைப் பற்றித் தொல்காப்பியம், சங்கப் பாடல்கள் ஆகியவற்றில் காண்கின்றோம்.

பிசிராந்தையார் தமக்கு முதுமை வாராமைக்குக் காரணம் கூறும்பொழுது,

> "மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
> யான்கண் டனையர் என் இளையரும், வேந்தனும்
> அல்லவை செய்யான்... ... ... ... ... ..." (1)

என்கிறார். இவர்களாலும் இன்ன பிறராலும் கவலை ஏற்படுவதில்லையாம் புலவருக்கு. மனைவி மக்களால் கவலை இல்லை என்றாலும்

---

(1) புறம்: 191.

வீட்டின்கண் பணிபுரியும் குற்றிளையரால் கவலையுண்டாகும். அத்தகைய கவலையும் அவருக்கு ஏற்பட்டிலது. ''யான் கருதிய அதனையே கருதுவர், என்னுடைய ஏவல் செய்வாரும்'' என்பது பழையவுரை. ஆனால் 'இளையர்' என்பது பிசிராந்தையாருடைய உடன்பிறப்புக்களையே குறிக்கும் என்று பொருள் கூறுவர் புலவர். பா. நாராயணன். 'உடன் பிறந்தோர் செம்மையில் வழியே அது துயர் தருவதொன்றாகும், அத் துன்பியல் நேராவகையில் என் உடன் பிறந்தோறும் அறிவு நலஞ்சான்ற நல்லோர்; யான் கருதுவதே கருதும் முரண்படா உளக் கோட்பாட்டினர் என்பார்.

'என் இளையரும்' என்றார் (2) என்று அவர் கூறுவது பொருந்தாது எனலாம். பிசிராந்தையாரின் பெற்றோர் உயிருடன் இருந்திருப்பின் இவர் உடன்பிறந்தாரைப் பற்றிக் கவலைப்படார் எனவேதான் பிசிராந்தையார் பாடலில் அவர் பெற்றோரைப் பற்றியோ உடன்பிறந்தாரைப் பற்றியோ கூறத் தேவை ஏற்படவில்லை போலும். பிசிராந்தையாரின் பின் பிறந்தோர் அவருடனே வாழ்வாராயின் அவரே தந்தை போல்வார் ஆதலின்: உடன்பிறந்தோரை ''மக்களும்'' என்பதனுள் அடக்கிக் கூறியிருப்பாரன்றோ? யான் கண்டனையர்'என்னும் தொடரினைக் கருதும் பொழுது. புலவரின் எண்ணத்தினை அறிந்து செயற்படுகின்ற தன்மையுடைய ஏவலரையே குறிக்கும் எனலாம், ஆகவே 'இளையர்' உடன்பிறந்தாரை குறிக்காது என்றே கருத இடமேற்படுகின்றது. மேலும் மனைவி, மக்களுடன் இணைந்தே ''மாண்ட என்மனைவியோடு மக்களும் இளையரும் நிரம்பினர் என்று கூறவில்லை. அவ்வாறு கூறியிருப்பாரெனில் புலவர் நாராயணன் கூறுவது சாலும். மாறாக, இளையரும் எனத் தனி அடியில் வேந்தனுடன் இணைத்துப் பாடியுள்ளதிலிருந்து இளையர் பிசிராந்தையாரின் பின் பிறந்தோர் என்று பொருள் கூறத் தடை ஏற்படுகின்றது. இளையர் என்பார் இங்கு ஏவலரே என்பதே வலிவு பெறுகின்றது. தன் பின் பிறந்தவரை மனைவி மக்களுடன் இணைத்துக் கூறாது வேறு பிரித்துக் கூறுவது புலவருடைய பெருந்தன்மைக்கும் உறவு முறைக்கும் அடுக்காதன்றோ! வேந்தனையும் சான்றோர்களையும் உறவினராகக் கருதாது பிரித்து தனியே கூறியவாறே. வீட்டின்கண் பணிபுரியும் ஏவலரைத் தனித்துக் கூறும் நோக்கமுடன்தான் இவ்வாறு கூறினாராதல் வேண்டும். ''ஏவலர் செவ்வையில்வழி அவரையகற்றிச் செவ்வி மிக்காரை அமைத்துக் கோடலுங்கூடும்'' என்று கட்டுரையாசிரியர் கூறுவது போல்

(2) 'இளையர் என்போர் ஏவலரா'? செந்தமிழ்ச் செல்வி : 54, பரல்: க, பக்கம் 30

புலவரின் வாழ்வில் நடைபெற்றிருக்குமானல் அதுவே மிகுதியும் கவலை தருவதாக அமைந்திருக்கக்கூடும். நாள்தோறும் ஏவலரை நீக்கிவிட்டுப் பிற ஏவலரைப் பணிக்கு அமர்த்துவதே ஒரு பெரும் பணியாய் போகும் புலவருக்கு. ஆகவே 'இளையர்' என்பதற்கு முன்னைய உரையாசிரியர் கூறிய 'ஏவலர்' என்று பொருள் கொள் வதே சிறப்புடையதாய்ப் படுகின்றது எனலாம்.

ஏவலர்களாக இருபாலாரும் விளங்கினர்

ஆடவர் மட்டுமல்லாமல் மகளிரும் ஏவலர்களாகப் பணிக் கமர்த்தப்பட்டனர் என்பதனை

"கோவலன் என்றுளோர் குற்றிளையாள் (3)

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி" (4)

எனவரும் அடிகளால் உணர முடிகின்றது

ஆடவர்கள் இல்லங்களில் பணி புரிவதற்கும், தலைவனுடன் சென்று அவரிடும் பணிகளைச் செய்வதற்கும் அமர்த்தப்பட்டனர் என்பதனைக் கீழ்வரும் பாடல் தொடர்கள் உறுதிப்படுத்துகின்றன. தலைவன் வினை முடித்து மீண்டு வரும் செய்தியை முன்னரே சென்று தலைவிக்குத் தெரிவிக்குமாறு தன் ஏவலரைத் தலைவன் ஏவினன் இதனை,

"மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுந ராக" (5)

என்பதனால் அறிய முடிகின்றது. கோவலனைத் தேடி வருமாறு மாசாத்துவான் ஏவலரை ஏவினன். இதனை,

"ஏவ லாளர் யாங்கணுஞ் சென்று
கோவலற் றேடிக் கொணர்கென" (6)

---

(3) சிலப் : கனாத்: 66

(4) சிலப் : கொலைக்களக், 85—86

(5) நற் : 42

(6) சிலப் : புறஞ்சேரி: 61—62

என்று வரும் அடிகளால் ஆடவர்கள் ஏவலர்களாகப் பணிபுரிந்தமை பெறப்படும். தலைவனைக் கூறும் பொழுது, "ஏவல் இளையர் தலைவன்" (7) "ஏவல் இளையரொடு மாவழிப் பட்டென" (8) எனக் கூறுவனகொண்டு தலைவன் ஏவுதலைச் செய்யும் வீரர்களையும் இளையர் என்றே அழைத்தமை புலனாகும்.

இடப்பட்ட பணிகள்:

பணியாளர்கள் வீட்டின் வாயிலில் காவல் செய்தனர். இதனை,

"துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவேல் இளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்" (9)

என்ற தலைவியின் கூற்றால் அறிந்துகொள்ள முடிகின்றது. தலைவன் இடும் பணிகளைத் தலைமேற்கொண்டு செய்வது ஏவலாளரின் பணியாகும். கானல்வரி பாடி மாதவியுடன் மனம் வெறுத்து வரும் பொழுது கோவலன் தன்னுடன் குற்றேவல் புரிவார் சிலரையும் அழைத்து வந்தான் என்பதனால் தெரிய வருகின்றது,

"பொழுதீங்குக் கழிந்ததாகலி னெழுதுமென் றுடனெழாது
ஏவலாள ருடன்சூழ்தரக் கோவலன்தான் போனபின்னர்" (10)

என்பதே அது. தலைவனுடைய வரவினை முன்னதாகவே அவன் தேர் வருவதற்கு முன்பாகவே தலைவியிடம் ஓடிவந்து கூறுவதற்கும் ஏவலர் பயன்பட்டனர் என்று எண்ண இடந்தருகின்றது நற்றிணைப்பாடல் 42. தலைவருடைய உடல் வலியினைப் போக்கி விடுதற்கும் அன்னோர் பயன்பட்டமையினை,

"நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடிக்
கல்லா இளையர் மெல்லத் தைவர (11)

என்ற அடிகளாலும், குற்றேவல் வினைஞர்கள் சாத்தம்மியில் வைத்துக் கருங்கொள்ளின் நிறத்தை ஒத்த கத்தூரி முதலிய பசுங் கூட்டினை அரைத்தமை,

(7) அகம் : 342
(8) நற் : 389
(9) அகம் : 122
(10) சிலப், கானல்வரி . 57—58
(11) சிறுபாண் : 32—33

"கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக" (12)

என்ற கூற்றாலும் தெளிவாகின்றது. இவ்வாறு குற்றிளையர், சிறுகுந் தொழுவர் ஏவல் இளையர் செய்த தொழில்கள் சங்கப்பாடல்களால் இனிது பெறப்படும்.

பணியாளரின் நிலை

குற்றேவல் புரிவதற்காக அமர்த்தப்பட்ட ஏவலர்கள் இல்லங்களைக் காவல் செய்தற்கும். அரைத்தல், கால்கை பிடித்தல் வெளியே சென்றாரைத் தேடிவரப் போதல், தலைவனின் வரவைத் தலைவியிடம் ஓடிவந்து அறிவித்தல், தலைவன் பிறவாறு ஏவுகின்ற பணிகளைக் கேட்டல் ஆகிய வீட்டுப் பணிகளையும் புறப்பணிகளையும் செய்து வந்தனர். இவ்வாறு குற்றேவல் புரிவோரின் வாழ்க்கை நிலை போலவே இருந்ததோ என்று கருதும் வண்ணம் மேற்கண்ட பகுதிகள் அமைந்துள்ளன. ஏனென்றால் இவர்கள் சமுதாயத்தின் உயர்நிலையில் வாழுகின்ற தலைவன் தலைவியரைப்போன்று ஐந்திணை அக ஒழுக்கத்தில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை போலும். இதற்குச் சான்றாக,

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்" (13)

என்ற தொல்காப்பிய நூற்பா அமைகின்றது. இதற்கு உரைவிளக்கம் கூறவந்த இளம்பூரணர், "இவர் அகத்திணைக்கு உரியரல்லரோ வெனின் அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும். அவர் நாணுக் குறைபாடுடையராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவாராகலானும், இன்பம். இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனாலும் இவர் புறப் பொருட்குரியராயினர் என்க" என்பதனையும்,

"குடிமுதற் சுற்றமும் குற்றிளையோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி" (14)

---

(12) நெடுநல் : 49—50

(13) தொல், அகத் : 25

(14) சிலப், கொலைகளக் : 84—85

எனவரும் சிலப்பதிகாரம் கூறும் செய்தியை அடிப்படையாக வைத்துக் குற்றிளையர்க்கு — ஏவலர்க்குச் சமுதாயத்தில் இருந்த ஏற்றத்தாழ்வையும், கொத்தடிமை நிலையினையும் ஏவல்புரிவாரினும், ஏற்றத்தாழ்வு இருந்தமையினையும் சுட்டிக் காட்டுவர், முனைவர். க. கைலாசபதி. (15) இக்குற்றேவலர்களைத் தலைமக்களாக்கி ஐந்திணைப் பாடல்களில் புலவர்கள் பாடினரிலர் என்பது மட்டுமன்று. இன்னபணி என்றில்லாமல் எவ்வகைப் பணிகளும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டன என்பதும் எண்ணத்தக்கன. கைக்கிளை, பெருந்திணைக்கண் இவர்தம் காதல் ஒழுக்கம் கூறப்படும் என்பதிலிருந்து இவர்களுக்குச் சமுதாயத்தில் தகுந்த இடம் நல்கப்படவில்லை என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது. குற்றேவல் புரிவோர்' செல்வர்களின் வீடுகளில் திருமணம் நடைபெற்ற பின், சீதனப்பொருள் போல மகளுடன் அனுப்பப்பட்டனர் போலும் பண்டைநாளில். இதனை,

> ''உரிமைச் சுற்றமொடு ஒருதனி புணர்க்க.''

எனவரும் சிலப்பதிகார அடிகளுக்குப் ''பல படைப்பாகிய செல்வத்தோடே நடத்திக் கைவந்து உயர்ச்சி பெறுதலைக் காணவேண்டி அடிமைத் திரளோடே வேறே கூட்ட '' என்று அடியார்க்குநல்லார் உரைக்கூற்றால் அறிய முடிகின்றது, குற்றேவல் மகளிர் என்பதற்கு 'எடுத்துக் கை நீட்டுவார்' என உரை கூறுவதும் இவண் ஒப்பு நோக்குதற்குரியது. இனைய செய்திகளால் பிசிராந்தையார் கூறிய இளையர் ஏவலராகிய குற்றிளையோரையே என்பதும், வீட்டுவேலைகள் மட்டுமல்லாமல் பிற வெளியுலகப் பணிகளை நிறைவேற்றவும் இளையர் பயன்படுத்தப்பட்டனர் என்பதும், அகனைந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாகப் பாடப்படுகின்ற பேற்றினை சமுதாயம் அவர்களுக்கு அனுமதிக்கவில்லை என்பதும், உரிமை வழங்கப்படா நிலையில் குற்றிளையர் இருந்தனர் என்பதும் புலனாகின்ற செய்திகள் ஆகும்.

---

(15) ஒப்பியல் இலக்கியம், பக் : 154—169

(16) சிலப், மனையறம் : 88

# அபிராமி சமயம்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை

(துணர் 54, மலர் 1 பக்கம் 19 தொடர்ச்சி)

மனம் அமைதியும் உறுதியும் பெறுதற்கு, ஐம்பொறிகளுக்கும் ஒருங்கே இறையின்பத்தை அபிராமி அம்மை அறிவுவடிவுடன் ஆனந்தமாய் நின்று ஊட்டு மென்பதும், பொறிகளின் இன்ப ஆற்றலுடன்விளங்கும் தளர்வறியா மனமுடையார், தன்னையும், உலகையும் இறைவிமயமாக அருளால் பழகின், மெய்யறிவு வாய்க்கப்பெற்று இறைப்பொருளுடன் இரண்டறக்கலத்தல் வழி திருவருளின் பேரின்பத்தை அனுபவித்தல் இயலுமென்பது அபிராமி சமயத்தின் உட்கோளாகும். இத்தகைய தெய்விக கோட்பாடுகளின் மாண்பினை அகக்கண்ணராகிய பட்டரது அனுபவ மொழிகளாலும், வாழ்க்கையின் வழிமுறைகளாலும் நோக்கினலல்லது எவரும் அவற்றைத் தெள்ளத்தெளிய ஆய்ந்துணர இயலாது. இதனை உன்னும் அளவிற்கு உண்மை புலனாகும்.

இறைவி, இயற்கையின் உயிர் எனக்கொண்டு இயற்கைவழி நின்றொழுகும் பட்டர் ஊண் உறக்கம் நீத்து, தளர்வறியா மனமொடு அன்பின் நிறைந்த ஏகாந்தத்தில் இறைவிமுன் அவரது உள்ளம் கொள்ளைபோகவே, அவரது உள்ளக்கவர்ச்சிக்கு ஒருபட்ட நாவு இறைநலமும் இறைவியின் வளமும் இழைந்து இணைந்தோட, கவி பாடத்தலைப்பட்டது. அதுதான் அபிராமி அந்தாதியாகும். அபிராமி அம்மையும் அன்பொலியை உடலாகவும், உண்மையை உயிராகவும் கொண்டு, கலைமகளாய், அவரது நாவில் வீற்றிருந்தாள். அதனுள் படியிலா அந்தாதிப் பாடல்கள், இயற்கையாய சத்துவ குணத்தைத் தட்டியெழுப்பும் பாடல்களாக அமைந்து அவரது அருவ மனத்திற்கேற்ப ஆராவமுதொப்பன, இதனை ஓதுவார் மெய்யுணர்வில் மேதையாவர். சுருக்கமாக முடிப்பக் கூறின் அபிராமி அந்தாதி ஞானமொழியினைச் சாற்றும் சாத்திரமாகி மிளிர்ந்து எளிய மந்திர வலிமை மிக்க தோத்திர வடிவாய் அமைந்து முதல்வியை உள்ளி அறியும் வாய்ப்புக்குத் துணையாக நின்று, சக்தி போத வாழ்வு நெறியினையும், நினைப்பற நினையும் நெறியினையும் அருளெழுச்சியுடனும் பேரின்பச் சிலிர்ப்புடனும் அளிக்கவவல்லது. மற்றும் தீந்தமிழின் சுவையாகவுள்ளக் கவிதைக் கலையின் எழில் கூறுகளையுடைய அந்தாதி, ஞானவிருந்து வனப்புடன் நிலைபேறுடைய தெய்வீக உண்மைகளையும், சமயவுணர்ச்சி நிறைவுகளையும் பக்தி மிக இனிய ஞானத்தால் இசைத்து அறிவிற்கு நல்விருந்தாகவும் அமைந்து திகழ்கின்றது. எனவே, இவ்வந்தாதியின் உரனுடைய சமயக் கருத்துக்களின் ஒளியினைக் கொண்டு, இறைவியின் திருவருளை அறிந்து நுகர்ந்து பயன்கண்டுய்ய முற்படல் வேண்டுமென்க,

அபிராமி சமயத்துத் தத்துவ வழிநின்று அம்மையாரது சேவடியைச் சிந்திக்கும் திருவுடன் அவளது அருள்வழிபட்டு பணி புரிந்தொழுகும் யோகியராகிய பட்டர், 'மின்னுயிர மெய் வடிவாகி. (55) இளர்சுடர் ஒளிமயமாய் மூலகாரணமாக விளங்கும் அம்மைக்கு; அருட்கதிர் விளங்கும் ஞாயிற்றையும் திங்களையும் இருகண்களாகப் பாவித்துக்கொண்டு, ஏகாந்தமாய் நெஞ்சார வழிபடவே, இறைவியின் சக்திக்கனல் அவரது உடலகத்தேபாய, காண்பரிய இறைவியின் பேரொளியில் அடிக்கடி பட்டர் மூழ்கி திளைப்பார். இவ்வணம். பட்டர் ஏகாந்த சிந்தனையோடு, அன்பில் நிறைந்த அருளுடைய அம்மையார் பால் பக்தி உணர்விற்கொண்டு உழன்ற ஞான்று, ஓர் நாள் அமாவாசையன்று. கடல் நீராடி கடவூருக்கு அபிராமிஅம்மையாரை வணங்குதற்கு வந்த சரபோசி மன்னர், அவரைக் கண்ணுற்றார். மன்னருக்கு முதற்கண் மறைந்து கிடந்த மாணிக்கம் போன்றிருந்த பட்டர், உலகியலில் ஒட்டியும் ஒதுங்கியும் நிற்கும் சுதந்திர ஞானத்தோடு, தன் இதயத்தில் மறைந்து உறைந்திருக்கும் சக்திகளை மலரச் செய்து. உவப்பிலா ஆனந்த களிப்பில் திகழ்ந்திருந்தார். ஆனால் அவரது ஒளி அவரை மன்னனுக்கு விளக்கிக்காட்டிற்று. பின்னர் மன்னன் அம்மையாரை வணங்கி வழிபட ஆங்கு முழுமுதல் முழுமதியொளிப் பிழம்பாய் வயங்கவே, அலகில் சோதியான இறைவியின் அருளினால் அமையும் உலகினையும், விண்ணில் முழுமதியினையும் கண்டு, தன்னையும் அருளால் அறியும், தெளிவினையும் உணர்வினையும் கொண்டான். சந்திரனது ஒளியில் மகா சக்தியைக் கண்ட மன்னன்,

'அருளால் எவையும் பாரென்றான் — அத்தை
அறியாதே சுட்டி யென்னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால் — கண்ட
என்னையும் கண்டில னென்னடி தோழி'

ஃ ஃ ஃ ஃ ஃ

'அன் றென்று மாமென்று முண்டோ — உனக்
கானந்தம் வேண்டி னறிவாகிச் சற்றே
நின்றால் தெரியு மெனவே — மறை
நீதி யெம் ஆதி நிகழ்த்தினான் — தோழி'

என்று தத்துவ கவிவாணராகிய தாயுமானச் செல்வரின் ஆனந்தக் களிப்பின் மெய்மையினைச் சற்று உற்றுணர்ந்தார் போன்று, இறைவியை மகிழ்ச்சி பொங்கப் போற்றி தமது பேற்றினைக் கருதி.

அவ்வொளி தனக்கு வழிகாட்டியாகவிருந்ததை உணர்ந்து, தமது உயிருக்கு நேர்ந்த, ஒருவித விளக்கத்தால் சொல்லுவதறியேன், வாழி! என விம்மிதத்தோடும் வியப்போடும் விளித்தான்.

அமாவாசையன்று முழுமதியின் ஒளியினைக் காணல் மகிழ்ச்சிதருதலான், அதனை உன்னற்பாலது இயற்கைக்கும் காரணகாரியமுறைமைக்கும் கடந்து அதீதமாய் அவற்றை அடக்கியாளும் சக்திகள் இயற்கை வழியாக, திருவருட்டிறத்தால் வெளித்தோன்றுங் காலை பருப்பொருட்காட்சிக்கு விளங்கும் இயற்கைத் தன்மைகளுக்கு மாறாய் நிகழ்ச்சிகள் சிற்சில சமயங்களில் நடைபெறுதல், கண்கூடாதலின், இஃது ஒரு அதிசயப் புதுமையன்று என வானநூல் வல்லர் கூறுவர். மதியும் பூமியும் பண்டு ஒளிப் பிழம்பாய் சூரியனிடத்திலிருந்து, காலாந்தரத்தால் வேறுபட்டு, சூரியனிடமிருந்து விலகி ஒளி மழுங்கியுள்ளன. ஆனாலும் சூரியனிடமிருந்து பெற்ற தனது ஒளியை தண்மதி தன்னுடையது போன்று காட்டித் தோன்றி, வெள்ளொளி பரப்பி நாளுக்குநாள் சிறிதாகி மறைந்து பின் முழுமதியாகிறது அமாவாசையன்று அம்மதி, வானவெளியில் இருந்தும், இல்லாதது போன்றிருக்கும் இயற்கைத் தன்மைக்கு மாருக, இறைச் சக்தியின் ஆற்றலால் ஒரேவழி அத்தினத்தில்மதி வெண்மைஒளியுடையதாகத் தோன்றினால், அந்நிகழ்ச்சியினைக் குறித்து மருட்கை கொள்வது இயற்கையே, இயற்கை மீறிய இத்தகைய நிகழ்ச்சிகள், இயற்கையிற் காணக்கூடிய சாதாரணமான முறைமைகளாதலின், அவைகளை மறுக்க வொண்ணாததாகும், இன்னருள் புரியும் இறைசங்கற்பமே விதியாயின், அது மாறுங்காலை நியதியும் மாறலாமென்பதில் சிறிதும் ஐயமிலை.

விம்மிதத்தால் ஆனந்தக் களிப்புற்ற மன்னன், சித்தம் அழகிய ராய பட்டரது தனக்கென ஒன்றுமில்லாத தன்மையினை வியந்து அன்னாரை அபிராமி பட்டர் என விளித்து, பாரதி (கலையணங்கு) யெனும் பட்டமும் வழங்கி விளைநிலங்கள் பல அளித்தனன். ஆத்மீகத் துறையில் சாதனம் மூலம் முன்னேறியபட்டர் புறத்தே எதனையும் ஏற்பது இகழ்ச்சியெனக் கொண்டு மன்னர் வழங்கியதை மதியாது மறுத்தனர் உள்ளம் இவ்வாறிருக்க வழிபாடியற்ற அமாவாசையன்று வந்த;தஞ்சை மன்னர் சரபோசி, பட்டரைத் திதியாதென வினவ அவர் இன்று முழுமதி நாளென விடையளிக்க அரசன் வெகுண்டு இன்று பௌர்ணமி இல்லையேல், தண்டனை அடைவீரென அச்சுறுத்தியதாகவும், பட்டர், தீக்குழியில் வீழ்ந்து மாய வஞ்சினங் கூறியதாகவும் போன்ற அவரைப் பற்றிய குறிப்புகள் புனைந்துரையாகும், சமயவுணர்வும், ஞானமும் வாய்ந்துள்ள சரபோசி மன்னன் வெகுள வேண்டிய அளவிற்கு பட்டர் யாதொரு குற்றமும் புரியாதிருக்கும்

போது, மன்னர் தண்டனை விதித்தாரென்பது நகைப்பிற்கு இட னாகும், காக்கும் காவலனுக்கு இஃது மறுவினை கற்பிப்பதாகும். எனவே, இத்தகைய கூற்றுகளுக்கு தக்க சான்றின்மையின் அவை களை முற்றும் ஏற்றுக்கொள்ள ஏலாது, பிற்காலத்தவர் யாரோ பொய்யானவைகளைப் புனைந்து கட்டியதாகுமென்பது தேற்றமாம்.

அபிராமி அம்மையாரை இடைவிடாது நிலைத்த உறுதியோடு கூடிய அன்பாலும் முறுகிய பக்தியாலும் வழிபடும் பட்டரைப் பார்ப்பன ஒழுக்கங் கெட்டவரென்றும் பலர் அழுக்காற்றின் மேலீட் டால் உண்மைக்கு மாறாகவும் புறம்பாகவும் பலப்படக் கூறும் மனக் கோட்டத்து பழிமொழிகளால் தம்தம் மனதிற்குத் தோன்றியவாறு ஏசியும் இழித்துப் பேசியும் குறைகூறியும், அவற்றினைப் பொருட் படுத்தாது, பட்டர், அன்னாரது அறியாமைக்கும், பொறாமைக்கும் இரங்கி பொறுமையுடனும் வெகுளியின்றியும் வாழ்ந்து வந்தாரென் பதும் செவி வழக்காய் வந்த செய்தியாகும், இறைவிபால் சித்தம் சிதறாது, வாய் பேசாதிருத்தலே, வையகத்தில் பாதி சித்தி என்பது பட்டரது உள்ளம். அவர் ஊழால் விளையும் இன்ப துன்பங்களை சம நோக்கோடு ஏற்று, பொறாமை உணர்வுக்கு அடிமை படாதவாறு, உணர்வினையும் இணைத்து, வாழ்வில் வருவன யாவும் இறைவியின் அருள் என்ற தளராத சீரிய மனநிலையைக் கொண்டவர். பட்டரது அந்தாதியை ஓர்ந்தும், ஆய்ந்தும் பயிலுமளவு நாமறிவது போது மானதால், கர்ணபரம்பரையாய் வந்த அவரது வரலாற்றினை அறிந்துகொள்ள அவசியமின்று அந்தாதியின் போக்கும் நோக்கும். கருத்தழகும். நடைநலனும் சொல் நலனும் கொண்டு பட்டரின் இயல்புகள் எத்தன்மைத்தென எண்ணி யுணர்ந்து துணிதல் வேண்டும்,

கடவூரில் சமய ஒழுக்கங்களில் தலைசிறந்து நின்று மெய்ப் பொருளுணர்வை யடைந்து 'ஐயா' (என் ஐ முன்நில்லன்மின் — குறள்) எனப் போற்றப்படும் அறம்புரி நெஞ்சுடைய அறிவோர் பல்கியகுலத்தின் கண் தோன்றியவர் அபிராமிபட்டர். இவர் கல்வி கேள்விகளில் மேம்பட்டு தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாக நல்லாசிரியர் பால் கற்று தேர்ந்து சாத்திரங்களிலும் நன்கு பயிற்சி பெற்றவர் பட்டர் என்ற சொல் புலவரென்றும். கோயிலில் பூசை புரிபவர் எனவும் பொருள்படும். பட்டர் மெய்ஞ்ஞானத்தையுடைய ஒரு சித்தர்; சக்திமான்; சக்தி பூசை புரியும் அந்தண அறவோர். அறத்தாறு போற்றி அன்பின் நிறைவால் ஆருயிர் போற்றும் அருந் தவச் சீலர், அறவாழி அந்தணன் கடவுளுக்குரிய பெயர்களுள் ஒன்று, அந்தணன் என்பதற்கு இறைவனென்றொரு பொருட் குறிப்

பினை நச்சினார்க்கினியர் பொறித்துள்ளார் (கலித்தொகை) அருளறத்தில் ஆழியாயுள்ள அந்தணரே, 'அந்தணன் ஆவதுங்காட்டி வந்தாண்டாய்' (திருவாசகம்) எனப்படுதலால், அந்தணன் ஆவதற்கு ஒருவர் அருளறம் செய்யவேண்டும்; மண்ணுயிர்களை ஓம்புதல் வேண்டும், தெய்வ சித்தமொடு சீலமுங்கொண்டு சீரியசெயற்கரிய செயலையும் புரிதல் வேண்டும். பார்ப்பனர் நாவில் பழகாது, பாமர மக்களது நாவில்வழங்கி நின்று உலவும் 'ஆத்தாள்' 'தங்கைச்சி' எனும் சொற்கள் அந்தாதியில் வந்துள்ளது காண்க. 'ஆத்தாள்' என்பது அன்பில் நிறைந்த அருள் வடிவம். 'தங்கை' எனப்படுவது தங்கைச்சியென பாமரமக்களது வழக்காற்றினையும் உன்னுக. ஆத்தாள், எங்கள் அபிராமவல்லியை' (10) எனவும், 'செங்கண்மால் திருத்தங்கைச்சியே' (61) என பட்டர் அந்தாதியின்கண் எடுத்தாண்டிருப்பதால் அந்தணாளராகிய பட்டர் பார்பனரல்லர் என யூக முறையில் கோடலும் சாலும். விழுப்பம் வீறிய அந்தணாளராகிய பட்டர் தவத்திருவுடைய வாழ்வினர்: அகத்துறை இறைவியைக் குறித்து தியான வேள்வி வழி உள்ளம் அள்ளூறும் தொண்டர். அவர் அபிராமி சமயத்திற்குரிய கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் வாழ்க்கையினைச் செம்மைப்படுத்தும் கலங்கரை விளக்கங்களாக அமையும்படி அபிராமி அந்தாதியை விதந்தோதியுள்ளார்.

எனவே, வாழ்வுக்குற்ற சிறந்த சித்தாந்தத்தை விளக்கி இறைவியை நல்லொழுக்க விதிமுறைகள் வழி அடையச் செய்வதே அபிராமி சமயத்துக் குறிக்கோள். மற்றும் இது இறைவியின் அருளைப் பெறுதற்குரிய உழைப்பின் முறைகளையும் அறிவுறுத்தும் மாட்சிமையோடு சமரசஞான நெறியினை எளிதில் எடுத்துக்காட்டும் பேற்றினையுமுடையது: ஆத்ம மெஞ்ஞானத்தோடு அருமைப்பாடுடைய விஞ்ஞானத்தையும் பயன்படுத்தும் வியனிலையை விளக்க அல்லது, இஃது பொய்தீர் ஒழுக்கநெறியினை அறிவுறுத்தி, அருணெறி பற்றிய ஞான விளக்கங்களை எடுத்துக்காட்டிக்காக்கும் ஞான அரண்; ஆனந்தசுதந்திர ஞானத்தில் மக்களைப் பரவச நிலையினை, எய்தும்படிச் செய்து ஆத்மானுபவங்களைச் சக்தியோக சாதனங்களோடு போதிக்கும் வளமாய ஞான நிலையம் (53); மென்மைவாய்ந்த இச்சமயம் இறைவியின் உண்மை நிலையினையும் அவ்வுண்மையில் வேண்டப்படும் உறுதிப்பாட்டையும் ஐய விபரீதமின்றி தியானமுறையில் தெளிவாகக் காட்டும் ஞான ஒளி (73) இன்பப்பேறு எய்துதற்குரிய பயன்களைக் குறைவற நல்கும் ஓரினிய கற்பகக் குளிர்தரு. இச்சமயம் அறநெறி நூல்களுக்கும் தர்க்க வகை நூல்களுக்கும் இணங்கிய சித்தாந்தத்தையும், சமய இயற்கைச் சிறப்பியல்புகளையும் வியக்கற்பாலதொரு வகையில்தன்கண் அடங்கக்கொண்டு தவநெறியும் சிவலோக சிந்தை

யும்தரும் மேன்மையுடையது (28), மற்றும் எதிர்மறையிலில்லாது உடன்பாட்டு முறையில், எடுத்த எடுப்பிலே மனத்தை அடக்க வேண்டுமெனுது, இறைவிபால் மனதைக் குழைத்து சர்வசாதாரண மாக நிலைக்கச் செய்யப் பயிலவேண்டுமென்றும், உலகச் சார்பினை யும் பற்றினையும் மனச்சோர்வுபட அறவே நீக்க வேண்டு மெனுது. இறைவிபால் ஆவியும், உடலும், உடமையும் ஒப்புவித்துவிட்டு பின் னர் இயல்பாய் படிப்படியாக அன்பினுலும் பக்தியினுலும் அறிவினு லும் பற்று பெருகி முதிரும்படி அருட்பேறு அடைதல் வேண்டுமென் றும், தலையாய மனவியல் முறையைத் தழுவிச் சுவைபடக் கூறும் மென்மையினையுமுடையது (95) இடர் தவிர்க்கும் அருளறிவையும் அருட்சித்தியினையும் அளிக்கவல்ல அம்மையாரை இகத்தில் பணிந்து வழிபடுதல் மூலம் (38) மறுமையில் பெறுவதை இம்மையில் அடை யச் செய்யும் (To attain Heaven upon this Earth) பெற்றிமை யினை இச்சமயம் செழுமையுற வாய்ந்துள்ளது. இச்சமயத்தின் தெளிவுக்காக, அபிராமி பட்டர், தம்மையே வேள்வி செய்து (Phoenix) நின்ற பொருண்மை மிக்க அருநிலை, நம்மை இயக்கி இனிய அபிராமி சமய வாழ்வில் இருத்தி வைத்து பெருநலம் பயவா நிற்கும்.

முற்றும்.

# "தொல்காப்பியரும் பெயரெச்ச உறவு நிலையும்"

டாக்டர், ஏ. ஆதித்தன்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

தொல்காப்பியனுர் பெயரெச்சம் செய்த, செய்யும் என்னும் இருவகை வாய்பாட்டில் வருமெனவும் 1 அது பெயர் கொண்டே முடியுமெனவும்2 குறிப்பிடுகின்றுர். இப்பெயரெச்சமும் அதுகொண்டு முடியும் பெயருக்குமிடையே காணப்படும் இலக்கண உறவினை ஆராய்வதே இக்கட்டுரை. 3

பெயரெச்சமும் அது ஏற்கின்ற பெயருக்குமுள்ள இலக்கண உறவுகளை ஆறுவகைத்து என்று தொல்காப்பியனுர் கூறுகின்றுர். 4 இவர் 'நிலமும் பொருளும்...' என்னும் நூற்பா மூலம் வினைக்கு முன்னுல் வரும் வினை, எழுவாய், செயப்படுபொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு இதுபயன் என்னும் வாய்பாட்டுக் கிளவி ஆகிய எட்டு உறுப்புக்களில் 5 இன்னதற்கு பெயரெச்சத்திற்கு முடிப்புச் சொல்லாக வரும் என்று கூறுகின்றுர்.

தொல்காப்பியனுர் இங்குக் குறிப்பிடும் பெயரெச்சமும் அது ஏற்கின்ற பெயருக்குமுள்ள இலக்கண உறவுநிலைகளை வேற்றுமை அடிப்படையில் அமைத்தால் இவ்வறுவகை உறவுநிலைகளை நான்கினுள் அடக்கிவிடலாம்.

பெயரெச்சம் — பொருள் என்ற இலக்கண உறவிற்குச் சான்ருகக் கூறப்படும் 'இராமன் கதையைப் படித்தான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'இராமன் படித்த கதை' என்பதனையும், பெயரெச்சம் — வினை என்ற இலக்கண உறவிற்குச் சான்ருகக் கூறப்படும் 'கண்ணன் ஊண் (ஐ) உண்டான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'கண்ணன் உண்ட ஊண்' என்பதனையும் செயப்படு பொருள் — பயனிலை ( Objective — Predicate ) என்ற உறவு நிலையில் அடக்கி விடலாம்.

இதுபோன்றே பெயரெச்சம் — காலம் என்ற இலக்கண உற விற்குச் சான்ருகக் கூறப்படும் 'முருகன் (ஒரு குறிப்பிட்ட) ஆண்டில் பிறந்தான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'முருகன் பிறந்த ஆண்டு' என்பதனையும், பெயரெச்சம் — நிலம் என்ற இலக்கண உறவிற்குச் சான்ருகக் கூறப்படும் 'அம்பிகா வீட்டில் வாழ்ந்தாள்' என்ற புதைவடிவான வெளிவடிவான 'அம்பிகா வாழ்ந்த வீடு' என்பதனையும் இடம்—பயனிலை (Locative-Predicate) என்ற உறவு நிலையில் அடக்கிக் கொள்ளலாம்.

எனவே, தொல்காப்பியனுர் பெயரெச்சத்திற்கும் அது ஏற்கின்ற பெயருக்குமிடையேயுள்ள உறவினை வேற்றுமை அடிப்படையில் கூறவில்லை என்று கருதவேண்டியதாயுள்ளது. 6 ஆகவே தொல்காப்பியனுர் பெயரெச்சம் அது ஏற்கின்ற பெயரின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய இலக்கண உறவுநிலைகளைக் கூறியிருக்கின்ருரா என்பதனைக் காணலாம். பெயரின் தன்மை என்பது ஈண்டு உரையாசிரியர்கள், இலக்கணக்காரர்கள் பெயரெச்சத்திற்கு முடிப்புச் சொல்லாக வருவனவாகக் குறிப்பிடப்படும் ஆறனுக்கும் தரும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அறுதியிடப்பட்டுள்ளது.

'அசோகன் பிறந்த ஆண்டு'. 'சபாபதி கழித்த காலம்' என்பன பெயரெச்சம் — காலம் என்ற உறவிற்குச் சான்ருகக் கூறப்படுகிறது, ஆனுல் இவை இரண்டும் இருவேறு வேற்றுமை உறவுநிலைகளில் வருகின்றன. 'அசோகன் (ஒரு குறிப்பிட்ட) ஆண்டில் பிறந்தான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'அசோகன் பிறந்த ஆண்டு' என்பது இடம்—பயனிலை ( Locative - Predicate ) என்ற உறவுநிலையிலும். 'சபாபதி காலத்தைக் கழித்தான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'சபாபதி கழித்த காலம்' என்பது செயப்படு பொருள் — பயனிலை (Object-Predicate) என்ற உறவு நிலையிலும் வருகின்றன.

இதுபோன்றே பெயரெச்சம்— நிலம் என்பதற்குச் சான்றாகக் கூறப்படும் 'சேகர் வாழும் இல்' என்பதும் 'ரமேசு கட்டிய இல்' என்பதும் இரு வேறு வேற்றுமை உறவு நிலைகளில் வருவதனை அறிய முடிகின்றது. 'சேகர் இல்லின் கண் வாழ்ந்தான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'சேகர் வாழும் இல்' என்பது இடம் = பயனிலை (Locative-Predicate) என்ற உறவு நிலையிலும், 'ரமேசு இல்லினைக் கட்டினான்' என்ற புதைவடிவின் வெளிவடிவான 'ரமேசு கட்டிய இல்' என்பது செயப்படு பொருள் — பயனிலை (Object-Predicate) என்ற உறவு நிலையிலும் அமைந்து காணப்படுகின்றன

எனவே, தொல்காப்பியனார், பெயரெச்சம் அது ஏற்கின்ற பெயரின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய இலக்கண உறவுநிலைகளைக் கூறவில்லை என்பது புலனாகின்றது. ஆகவே தொல்காப்பியனார் 'நிலமும் பொருளும்...' என்னும் நூற்பாவில் பெயரெச்சத்திற்கும் அது ஏற்கின்ற பெயருக்குமுள்ள இலக்கண உறவுநிலையினை எவ்வடிப்படையில் கூறுகின்றார் என்பது ஆய்வுக்குரிய ஒன்றாக அமைகிறது.

## குறிப்புக்கள்.

1. தொல்காப்பியம், வினையியல் : 37
2. தொல்காப்பியம், எச்சவியல் : 34
3. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்து 'பெயரெச்ச உறவு நிலைகள்' என்ற கட்டுரையிலும் கூறப்பட்டுள்ளது.
   - ஏ. ஆதித்தன் 'பெயரெச்ச உறவு நிலைகள்', இலக்கியப் பூங்கா - 7 (1977), பக், 88 — 93.
4. தொல்காப்பியம், வினையியல் 37
5. தொல்காப்பியம், வேற்றுமை மயங்கியல் : 28
6. பெயரெச்சம் — பொருள், பெயரெச்சம் — வினை எனும் இரண்டையும் செயப்படுபொருள்—பயனிலை (2ஆம்வேற்றுமை) உறவு நிலையிலும், பெயரெச்சம் — நிலன், பெயரெச்சம் — காலம் எனும் இரண்டையும் இடம் — பயனிலை (7ஆம் வேற்றுமை) உறவு நிலையிலும், பெயரெச்சம் — கருவியினை கருவி — பயனிலை (3ஆம் வேற்றுமை) உறவு நிலையிலும், பெயரெச்சம் — வினைமுதல் எழுவாய் — பயனிலை (1ஆம் வேற்றுமை) உறவு நிலையிலும் கூறலாம். வேற்றுமை அடிப்படையில் கூறினால் ஆறுவகையான உறவுகள் தேவையில்லை,

---

* இக்கட்டுரை எழுதுவதற்குப் பேருதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்களுக்கும், இணைப் பேராசிரியர் டாக்டர் ஜெக, நீதிவாணன் அவர்களுக்கும் நன்றி.

# ஆய்தம்
# என்னும் முப்பாற்புள்ளி

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

நூன்மரபினுள் தோற்றுவாய் செய்யப் பெற்ற சார்பெழுத்துக்களுள் மூன்றுவதாக ஓதப்பெறுவது இவ் ஆய்த எழுத்து. இது இன்றைய உலகில் நிலவும் பிறமொழி எழுத்துக்களையும் — மிக நுட்பமான எழுத்தொலிகளையும் ஒலித்துக் காட்டுதற்குரிய ஆற்றல் வாய்ந்ததென பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களும். ந. மு. கோவிந்த்ராய நாட்டார் அவர்களும் விளக்குவர்.

ஆய்த எழுத்தைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாக ஆசிரியர் அமைத்துக் கூறியிருப்பினும் ஏனைய இரண்டு சார்பெழுத்துக்களைக் காட்டினும் இது சிறப்புடையது. ஒலிமுறையமைப்பால் வேறுபட்டது மாறுபட்டது. ஆழ்ந்து நோக்கின் எல்லா எழுத்துக்களையும் விட உயர்ந்ததென்பதை அறியலாம்.

ஆய்த எழுத்தைப்பற்றித் தொல்காப்பியர் எழுத்ததிகார நூன்மரபிலும், மொழிமரபிலும் சிறப்பாகவும் பிற இடங்களிற் குறிப்பாகவும் இதன் தன்மைகளை விளக்கிச் சென்றுள்ளார். அந்நூற்பாக்களால் இதன் பெயர் உரு வடிவு நிலை, அளவு பிறப்பமைதி, மொழிக்கண் தோன்றுமிடம். சொற்புணர்ச்சியுள் தோன்றும் நிலை ஆயவற்றைப் புலப்படுத்துகிறார். அவற்றால் இதன் இயல்பையும் பயனையும் நாம் உய்த்துணருமாறு செய்துள்ளார்.

உரையாசிரியன்மார் தொல்காப்பியர் கருத்தைப் புலப்படுத்தும் முறையில் உரைகாண முயலாமல் பிற்கால இலக்கியங்களில் இதுபயின்றுள்ள நிலையை ஓர்ந்து அதற்கு விதிகாணும் முறையிற் பெரிதும் முயன்றுள்ளனர். அதனால் நூலாசிரியர் கருத்தை முயன்று காண்பது. நம் பொறுப்பாகும்.

தொல்காப்பியர் ஆய்த எழுத்தைச் சார்பெழுத்து மூன்றனுள் ஒன்றாக வைத்து "ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி" என்று கூறுகின்றார், இதனான் அதன் பெயரும் வடிவமும் நன்கு புலனாவதைக் காண்கின்றோம். 'என்ற' என்னும் இறந்த காலச் சொல்லாற் சுட்டுவதனால் இக்குறியீடும் வடிவும் தொன்மையானவை என்பதைப் புலப்படுத்தியுள்ளார். பின்னர் மொழி மரபினுள்

''குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே என்னும்

நூற்பாவாயிலாக இது மொழிக்கண் தோன்றிமிடத்தையும் தோன்றுதற் கமைந்த சார்புகளேயும் கூறி, அடுத்து

''ஈரியல் மருங்கினும் இசைமைதோன்றும்.'' என்னும் நூற்பாவால்இதன் உரு (ஒலி வடிவம்) வும் இயல்பும்,சார்பெழுத்து என்பதற்குரிய விளக்கமும் புலப்படக் கூறுகின்றார் இந்நூற்பாவின் பாடத்தை''ஈறியல்'' மருங்கினும் எனக்கொண்டமையால் உரையாசிரியன்மார் அனைவரும் இந்நூற்பா ஆய்தம் புணர் மொழியிடத்து வரும் என்பதற்கு விதி எனக் கருதியதோடமையாமல் ஒரு சாரார் இஃது தனக்குரிய அரைமாத்திரை யளவினும் சுருங்கிக் கால்மாத்திரையாகி நிற்கும் என்றும் கூறினர்: இக்கருத்தை மேற்கொண்ட பவணந்தியார்

''லளவீற் றியைபினுன் ஆய்தம் அஃகும்'' எனக்கூறி நூற்பாச் செய்ததோடமையாமல் இவ் ஆய்தக் குறுக்கத்தையும் ஒரு சார்பெழுத்தாக எண்ணித் தொகை கூறினர். இந்நூற்பாவின் செம்பொருளைப் பின்னர்க் காண்போம்.

'அடுத்து உருவினும் இசையினும் அருகித்தோன்றும்' எனத் தொடங்கும் நூற்பாவால் இஃது தன் அரைமாத்திரையினுட் சிறிது மிக்கொலிக்குமிடமும், இதன் சிறப்பியல்பும் நுணுக்கமாகக் கூறி, அடுத்துப் பிறப்பியலுள்

'சார்ந்து வரினல்லது'' எனத்தொடங்கும் நூற்பாவால் இதன் இடப் பிறப்பும் முயற்சிப் பிறப்பும் புலப்படுத்துகின்றார்

ஏனைய இயல்களுள் இது பிற சொற்களின் புணர்ச்சிக்கண் எய்தும் நிலைபற்றியும்-சாரியைப் புணர்ச்சியுள் விரித்தல் விகாரமாக வருதலை உடம்பொடு புணர்த்தியும் கூறுகின்றார்.

செய்யுளியலுள் ''நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்'' என்னும் நூற்பாவால் இதன்தன்மையும் பயனும் தோன்றும் வண்ணம் நுட்பமாகக் கூறுகின்றார்.

இவ்வாறு ஆசிரியர் கூறும் கருத்துக்களை அவர் வரைந்துள்ள நூற்பாக்களை ஒட்டி இனி விளக்கமாகக் காண்போம்.

எழுத்ததிகார நூன் மரபினுள் பெரும்பாலும் எழுத்துக்களின்

ஒலி வடிவங்களுக்கும் சிறுபான்மை வரி வடிவங்களுக்கும் விளக்கந் தருபவர் எல்லா எழுத்துக்களுக்கும் தாராமல் சிலவற்றிற்கு மட்டும் கூறக்காரணம் திரிபின்றித் தொன்றுதொட்டு வருவன தவிர இடையே வட்டார வழக்குக்களால் திரியும் இயல்புடையவற்றிற்கு மட்டும் கூறினாராகக் கொள்ளலாம், சான்றாக

"உட்பெறு புள்ளி உருவாகும்மே" என்னும் நூற்பா மகரக் குறுக்கத்தின் வரிவடிவம் பற்றியதென்று கருதாமல் பகரத்திற்கும் மகரத்திற்கும் உள்ள வரிவடிவ வேற்றுமையை புலப்படுத்துவதாக உரையாசிரியர் கூற்றும், ஆய்த எழுத்தைப்பற்றி விளக்கும் நச்சினார்க்கினியர் இக்காலத்தார் இதனை நடுவு வாங்கியிட்டெழுதுப எனக் கூறியுள்ள கூற்றும், எழுத்துக்களின் வரிவடிவங்கள் காலத்தால் சிறிது மாறுபட்டுவந்துள்ளன எனக் கருதுதற்குந் துணை செய்வதைக் காணலாம்.

"உட்பெறு புள்ளி உருவா கும்மே"

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்"

"எகர ஒகரத் தியற் கையும் அற்றே"

என்பன வரிவடிவ இலக்கணம்.

"புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவு ருவாகி யகரமோடுயிர்த் தலும்
ஏனை உயிரோ டுருவுதிரித் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே"

என்பது உருவடிவிற்குச் சிறப்பாகவும் வரிவடிவிற்குப் பொதுவாகவும் கூறிய இலக்கணமாகும். இவை போல்வன இன்னும் சில உள.

இனி ஆய்தம் உயிருமாகாது, ஒற்றுமாகாது அவற்றைச் சார்ந்து வேறுபட்டு ஒலித்து வரும் எழுத்தாகலின் இதன் இருவகை வடிவையும் தெளிவாகப் புலப்படுத்துவது ஆசிரியர் கடப்பாடாகும், ஆதலின் இவ்வெழுத்தைப் பின்னர் "ஆய்தம்" என்றும் 'புள்ளி' என்றும் வழங்குபவர், ஏனைப் புள்ளி எழுத்துக்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு விளக்குமுகத்தான் "ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி "எனத் தொடக்கத்திலேயே விரித்துரைப்பாராயினர்.

முப்பாற் புள்ளி என்பதற்குச் சார்பெழுத்து மூன்றும் புள்ளி பெறும் என உரை காண்பார் சிலர். அது பொருந்தாதென்பதை

மேல்வரும் இவ் ஆய்வுரையாற் காணலாம். மற்று ஆய்தம் என்னும் பெயரே இதன் வரிவடிவத்தை விளக்க வந்ததாகக்கொள்வார் சிலர். அதுவும் பொருந்தாது. என்னை? ஆயுதம் என்பது முத்தலை வேலை (திரிசூலம்)மட்டும் உணர்த்தும் சொல்லன்று. அஃது வில் வேல் வாள் தண்டு முதலாய போர்க்கருவிகளுக் கெல்லாம் பொதுவாதலோடு பிற தொழிற் கருவிகளுக்கும் பொதுவாகும். அன்றியும் அது வடசொல் லாதலையும் காணலாம்.

ஆய்தம் என்னும் சொல் ''ஆய்'' என்னும் உரிச்சொல்லடி யாகப் பிறந்த பெயர் என்பதைப் பேரறிஞர் தெ. பொ. மீ. அவர் களும், மொழியறிஞர் பாவாணர்{அவர்களும் பிறரும் நன்கு விளங்கி யுள்ளனர். அதனான் இஃது ஆஸ்ரிதம், ஆசிதம் என்னும் ஆரியச் சொல்லின் திரிபென்பார் கூற்றும் பிழையான தென்பது தெளிவாம்

மற்று ஆசிரியர் இதனை **முப்பாற் புள்ளி** என்று குறிப் பிட்டது மிக்க நயமானது. அழகானதென்பதைக் காணலாம். புள்ளி என்பது சிறு கீற்றுக்குப் பெயர் (Hyphen) இக்காலத்துச் சிலர் கருதுவது போன்று ஒற்று (Dot) அன்று.

இப்புள்ளியை' | 'இவ்வாறு செங்குத்தாகவோ '—' இவ்வாறு கிடத்தியோ வரையலாம். இந்நிலையில் ஆசிரியர் இதனை முப்புள்ளி எனக் கூறியிருப்பின் | | | இவ்வாறு இடமிருந்து வலமாகவோ ☰ இவ்வாறு மேலிருந்து கீழாகவோ எழுத நேர்ந்திருக்கும், இடைக்காலத்து எழுந்த கல்வெட்டுக்களில் ஆய்தத்தின் வடிவம் o|o இவ்வாறும் —:— இவ்வாறும் பொறிக்கப்பட்டுள்ளமை யால் ஆசிரியர் காலத்து வட்டார வழக்குக்கள் முரண்பட்டிருத்தல் வேண்டும். அதனான் இவ்வெழுத்தின் வரி வடிவத்தை நியமிப் பாரராய் ஆசிரியர் மூன்றுபுள்ளிகளும் ஒன்றை ஒன்று சாராமல், சேரா மல் முப்பாலாக (மூன்றுகோணமாக) மூன்று பகுதியாக முரண்பட்டு அமைதல் வேண்டும் எனக்கூறியுள்ளார் எனத் தெரிகிறது. அஃதாவது

|̣ ‾ ‾ ‾
| |. — —, —‾. ‾—, இம்முறையில் இதன் வரிவடிவம் அமைதல் வேண்டும் என வலியுறுத்தவே முப்பாற்புள்ளி எனவிதந் தோதியுள்ளார் எனலாம். நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவே எனி னும் அவர் ''கூறிய அடுப்புக்கூட்டுப்போல'' என்னும் உவமை பிறவற்றின் மேலும். (அவ்வியாத்தி) செல்லும் குற்றமுடையதாக உளது. என்னை? இக்காலத்து நாற்கோண அறுகோண, வட்ட அடுப் புக்களும் உளவாகலின் என்க.

இனி இதன் ஒலிவடிவு பற்றிய ஆசிரியர் கருத்தைக் காண்போம்.

ஆய்தம் என்னும் சொல்லின் (பகுதியாகிய) முதனிலை 'ஆய்' இதற்கு உள்ளதன் நுணுக்கம் என உரியியலுள் ஆசிரியர் பொருள் கூறுவார். மேலும் செய்யுளியலுள் 'நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்' என்னும் நூற்பாவால்

ஆய்தம் நலிதல் ஓசையுடையதென்று கொள்ளவைத்துள்ளார் ஆகவே நலிந்து நுணுகி ஒலிப்பதின் ஒலிவடிவம் என்பது புலனாகும் மேலும் "ஆய்தம் அஃகாக்காலையான" என்றும், குறித்தெதிர்மொழி தல் அஃகித் தோன்றும் என்றும் கூறுதலான் அஃகுதல் (சுருங்கி ஒலித்தல்) இதன் இயல்பென்றும்

" உருவினும் இசையினும் அருகித் தோன்றும்

மொழிக்குறிப் பெல்லாம் "

என்பதனால் இஃதொரு குறிப்பொலியாகி வரும் என்றும் புலப்படுத்தி யுள்ளார். சார்பெழுத்துக்களின் பிறப்பிலக்கணம் கூறும் நூற்பாவான் இதன் ஒலியமைப்பையும் இயல்பையும் தெளிவு படுத்தி யுள்ளார். இந்நூற்பாவிற்கு உரையாளர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு உரை கூறியுள்ளமையால் அதன் செம்பொருளை ஈண்டுக்காண்பது நலமாதலின் அதன் உரை வருமாறு

சார்ந்துவரினல்லது தமக்கியல் பிலவெனா

தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்

தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி

ஒத்த காட்சியிற் றம்மியல்பு இயலும் (தொல்—101)

தத்தமக்கேற்ற முதலெழுத்துக்களைச் சார்ந்து இயங்குதலன்றித் தனித்து தாமாக இயங்கும் இயல்பில்லாதன என (தொல் 1. 2. நூற் பாவில்) ஆராய்ந்து குறிப்பாக எடுத்துக்கூறப் பெற்ற உயிரும் மெய்யும் அல்லாத சார்பெழுத்துக்கள் மூன்றும். தாம்தாம் முன்னும் பின்னும் சார்ந்தியங்கும் தத்தமது முதலெழுத்துக்களின் பிறப்பிடங் களோடு கூடித் தம் இயல்பு பொருந்தி அவ்விரண்டோடும் ஒத்த தோற்றத்தோடே பிறந்தியங்கும்.

மூன்றும் சிவணி தம்மியல்பு ஒத்தகாட்சியின் இயலும் என வினை முடிபு செய்க.

தத்தம் சார்பெனிற முறையில் ஆய்தத்தின் சார்பு, முன்னர்க் குற்றுயிர்களும் பின்னர் வல்லெழுத்துக்களுமாம். இதனைக்

''குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே''

என்றதனுல் அறியலாம்.

ஆக குற்றுயிர்கள் பிறக்கும் மிடற்றிடமும் வல்லெழுத்துக்கள் பிறக்குந் தலையிடமும் சார்பெனவே, அவை பற்றுக்கோடாக அவ்விரண்டற்கும் பொதுவாய இடத்தில் இதன் ஒத்தகாட்சி தோன்றும் என்க: இவ்வாறே அவ்விருசார் எழுத்துக்களும் பிறப்பதற்குரிய அண்ணம் பல். இதழ். ஆகிய உறுப்புக்களின் தொழிலால் இதன் ஒத்தநா, காட்சி தோள்றும் என்க.

எனவே அஃது என்னும் சொல்லிடை வருங்கால் அகரத்திற்கும் தகரத்திற்கும் உரிய அண்ணம், பல். நா. ஆகிய உறுப்புக்களின் தொழிலானும் எஃகு என்னும் சொல்லிடை வருங்கால் எகரத்திற்கும் ககரத்திற்குப் உரிய உறுப்புகளின் தொழிலானும், இவ்வாறே ஏனையவற்றைச் சார்ந்து வருங்காலும் அவ்வவற்றிற்குரிய உறுப்புக்களின் தொழிலாலும் பிறக்குமென்க. மற்று லகர ளகர ஈறு புணர்ச்சி விகாரத்தால் ஆய்தமாகத் திரியுங்கால் அவ்வாய்தமும் அதன் இருமருங்கும் உள்ள எழுத்துக்களின் பிறப்பியல்பையே பெறும் என்பதும் போதரும்.

இவ்வாற்ருன் இவ்வாய்த எழுத்து முன்னின்ற குற்றெழுத்தைந்தோடும் பின்னிற்கும் வல்லெழுத்தாறனேடும் தோன்றுதலின் முப்பது வகையான ஒலிவடிவைப் பெறுகின்றது இவ்வகை ஒலிவேறுபாட்டினை எஃகு செவியான் ஒலித்துணர்தல் வேண்டும் ஆயினும் இம்முப்பது வகைக்கும் சொற்கள் இல்லை. ஙகரம் பன்னிரண்டு உயிரோடும் கூடுதற்குரித்தாயினும் அகரஉயிர் ஏறிய ஒரெழுத்து மட்டுமே பயின்று வருதலைப் போல இவ்வாய்தமும் சில சொற்களில் மட்டுமே பயில வழங்கி வருகின்றது.

அதனுன் நுண்ணறிவும் எஃகு செவியும் உடையார்க்கே இவ்வாய்தத்தினியல்பு புலனுதலின் ''ஒத்த காட்சியின் தம்மியல்பியலும்'' என்ருர் ஆசிரியர். இவ்வாறே பிறப்பியல் முதல் நூற்பாவின் கண்ணும் திறப்படத் தெரியுங்காட்சியான' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் நூல் உத்திகளை விரித்துணர்த்தும் மரபியல் இறுதி நூற்பாவின் கண்ணும் திறப்படத் தெரியுங் காட்சியான எனக் குறிப்பிட்

டுள்ளார் மேலும் நூல் உத்திகளை விரித்துணர்த்தும் மரபியல் இறுதி நூற்பாவின் கண்ணும் ஓர்ந்துணர்வார்க்கே உத்திகளின் இயல்பு தெற்றெனப் புலனாகும் என்பதை உணர்த்தவே ஒத்த காட்சியின் உத்தி என விதந்தோதியுள்ளார் என்க.

'காட்சி' என்னும் இச்சொல்லின் நுட்பத்தை நன்கு உணராத நச்சினார்க்கினியர் இதற்கு இருவகை வழக்கிலும் காணப்படாத 'நெஞ்சு' என்னும் பொருளைக் கூறினார். மேலும் 'ஏனைய' என்னும் பாடத்தை 'ஏனை' எனத் திருத்திப் பொருள் கூறினார். ஏனை என்பதே பாடமாக இருப்பினும் அஃது இடைச் சொல்லாகலின் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவேயாம். இவ்வாறு நச்சினார்க்கினியர் மயக்கும் இடங்கள் பலவுள அவற்றை வந்துழி வந்துழிக் காண்போம்.

இனி ஆய்த எழுத்து உயிரைச் சார்ந்து அதன் பின்னும் வல்லெழுத்தைச் சார்ந்து அதன் முன்னும் தோன்றுதலைக் "குறிய தன் முன்னர் ஆய்தப்புள்ளி" என்னும் நூற்பாவாற் புலப்படுத்தினார். அதனையடுத்து இவ்வாய்தம் இவ் இருசார் எழுத்துக்களின் ஒலிகளைச் சார்ந்து எழும் ஓசையோடு தோன்றுமென்றும் அத்தன்மையால் இஃது உயிருக்கும் மெய்யிற்கும் பொதுவாய் அவ் இரண்டன் இயல்பையும் பெற்றியங்கும் என்று விளக்குவாராய்;

"ஈரியல் மருங்கினும் இசைமை தோன்றும்"

என்று கூறினார்,

இவ்வாறே ஆயீரியல உயிர்த்தலாறே (நூ-17)
மெய்யே உயிரென்றாயீரியல (நூ-10)
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே (நூ-)

எனக்கூறுவர். இவற்றை ஓராமல் இந்நூற்பாவிற்கு "ஈறியல்" எனப் பாடங்கொண்டு உரையாளர் யாவரும் ஆசிரியர் கருத்திற்கும் மொழி மரபிற்கும் பொருந்தா உரை கண்டு இக்கால மொழி நூலாரையும் மயங்க வைத்துள்ளனர் குற்றியலுகரத்தைப் போன்றே ஏனைய மெய், உயிகளைப் போன்றே ஆய்தம் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வாராதென்பதனை நன்கு பயின்றிருந்தும் உரையாளர்கள் ஆய்தம் புணர்மொழியிடத்து வரும் எனக் கொண்டமையை என்னென்பது?

இனிக் கஃறீது—முஃடீது என்பவை புணர்மொழியிடைவந்த ஆய்தமன்றோ எனின்? அவை லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியாவ

தல்லது ஆயுத ஈற்றுப் புணர்ச்சியாகாவென்பது வெள்ளிடைமலே. புணர்மொழியிடத்து நிலைமொழி யீற்றெழுத்தும் வருமொழி முத லெழுத்தும் வேறுபடுதலை "மெய்பிறிதாதல்" என்னும் புணர்ச்சித் திரிபென்பார். அம்முறையால் லகரஈறு வல்கணத்தோடு புணருங் கால் றகரமாதலை

"லகார இறுதி னகார வியற்றே" என்றும்

மென்கணத்தோடு புணருங்கால் னகரமாதலை

"மெல்லெழுத்தியையின் னகாரமாகும்" என்றும் கூறி வரு மொழி வல்லெழுத்துத் தகரமாயின் லகரம் றகரமாகத் திரிதலே யன்றி ஆய்தமாகவும் திரியும் இயல்பினை நன்கு ஓர்ந்து

தகரம் வரு வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே

என விதந்தோதினர். இவ்வறே ளகார ஈற்றிற்கும் விதி களைக் கூறினர். இவற்றை ஆசிரியர் ஆய்தப் புணர்மொழியாகக் கருதியிருப்பின் அவ் + கடிய என்பவை அஃகடிய எனவும் புணர் தலின் வகர ஈற்றையும் இதனோடு சேர்த்துக் கூறியிருத்தல் வேண்டும். அன்றிப் பிறிதோர் எழுத்துப் புணர்ச்சியுள்வரினும் அதனை ஆய்தப் புணர்ச்சியாகக் கொள்ளலாமே எனின் மொழியிறு தியில் வாராத ஙகரம் மகர ஈற்றுப் புணர்ச்சியுள் மாம் + குறிது = மரங் குறிது என வருதலின் அதனைப் புணர்மொழி ஙகரம் எனக் கொண்டு விதி கூறல் வேண்டும். அதனான் புணர்மொழி ஆய்தம் என்பதொன்றில்லை என்பதும் கஃறிது, முஃடீது, அஃகடிய முதலாய சொற்கள்

"குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே"

என்னும் நூற்பாவின் கண்ணேயே அடங்கும் என்பதும் தெளிவாம்

(தொடரும்)

# கையறவு.

நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினரும் சங்க நிறைவேற்றுக் கழக முன்னாள் உறுப்பினரும், தஞ்சைக் கல்வியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவிருந்து ஓய்வு பெற்றவருமான அன்பர் திரு. அ. வடிவேலனார். அவர்கள் 29 - 4 - 80 செவ்வாய்க்கிழமையன்று திடுமென இம்மண்ணுலக வாழ்வை நீத்த செய்தியறிந்து திடுக்குற்றோம் ஓரிரு நாட்கள் கூட உடல் நலமின்றிப் படுக்கையில் கிடந்து துன்புறாது "உறங்குவது போலுஞ் சாக்காடு" என்ற வள்ளுவர் வாக்கிற்கொப்ப அவர்கள் உயிர் பிரிந்தமை பெருவியப்பிற்குரியதாகும். இதற்குக் காரணம் அவர்கள் மேற்கொண்டு ஒழுகிய அறநெறி வழாத தூய வாழ்வேயாகும். அறவாழ்வு வீடுபேறு அளிப்பதோடன்றி, இம்மையில் பிணி மூப்பு போன்ற துன்பங்களினின்றும் நீக்கும் என்ற பேருண்மைக்குச் சான்றாக வடிவேலனார் அவர்கள் திகழ்ந்தார்கள். அடக்கம், ஆரவாரமில்லாதத் தமிழ்த் தொண்டு, இன்சொல், வினைத்திட்பம், ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவு, "யாதும் ஊரே. யாவரும் கேளிர்" என்றபடி அனைவரிடமும் அன்புறவு முதலிய பண்பு நலன்கள் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர், மனிதன் பல ஆண்டுகள் பிணியின்றி இன்பமுடன் வாழலாம் என்ற உண்மையைப் புலப்படுத்தும் அளவில் ஒரு நடமாடும் அறநூலாகவே விளங்கினார் வடிவேலனார் எனின், அது மிகையன்று.

தமிழ்மொழியினிடத்துக் கொண்டிருந்த ஆறாக்காதலினால் தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, திரு. A.T., பன்னீர்செல்வம் போன்ற சங்கச்சான்றோர்களுடன் இணைந்து சங்கத்தின் தமிழ் பணிகளில் பங்குபற்றிச் செயலாற்றிய திறம் வியந்து போற்றுதற்குரியதாகும் அவர்கள் அந்நாள்முதல் இந்நாள்வரையில் சங்கத்தில் நிகழ்ந்துவரும் சிறு நிகழ்சிகளுக்கும்கூடத் தவறாது முன்னதாகவே வந்திருந்து அனைவரிடமும் கலந்துரையாடிச் சிறப்பிக்கும் பாங்கு சொல்லுந்தரமன்று. மற்றும், அவர்கள் உலகப் புகழ் வாய்ந்த தஞ்சை சரபோசி மன்னர் சரசுவதி மால் நூல்நிலைய மதிப்பியல் செயலாளராகவிருந்து அச்சிடப் பெறாதிருந்த பல தமிழ் நூல்களை வெளியிடச் செய்தது அவர்களுக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்தது. இத்தகு சிறப்புகள் பொருந்திய தகவுடைத் தமிழ்ப்பண்பாளரை இழந்தமைக்கு வருந்துவதோடு, அவருடைய குடும்பத்தாருக்கு சங்கத்தின் ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக் கொள்கிறோம், அவர்களின் இன்னுயிர் இறையின்பத்தில் அமைதி நன்னிலை பெற்று ஒளிர்வதாக,

பொழிற்றொண்டர்.

# கையறுநிலை விண்ணப்பம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்
கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

1) கடியாரும் கடம்பணிவேள் கழல்மறவாக்
கலைவல்லாய்! களிறே போலும்
நடையார்ந்த மிடுக்குடையாய்; நயனறிந்த
நெஞ்சத்தாய்! நல்லோர் நாவால்
"வடிவேலன்" எனப்போற்ற வாழ்வாங்கு
வாழ்ந்ததமிழ் மணியே! யாண்டுக்
குடிபோனாய்? யாம்செய்த குறையேது?
எம்குலத்தவமே குணக்குன்றே! ஆ

2) ஆற்றுவமோ அணைகடந்த வெள்ளமெனும்
அருந்துயரை? அந்தோ! ஐயா!
சாற்றுவமோ நின்சிறப்பைத் தடைப்படுமோ
கண்ணருவி? சலியா அன்பை
போற்றுவமோ? நின்செயலைப் புகலுவமோ?
புகழுருவே! பொடிக்கும் நெஞ்சைத்
தேற்றுவமோ? செயலறியோம்வணங்குகிறோம்
தெய்வதமே! சிவமே! அந்தோ!

3) சான்றாண்மைக் கோருருவே! தகவினுக்கோ
ரிருப்பிடமே! தமிழ் பயின்ற
ஆன்றோர்தம் அகத்திலமர்ந் தொளிர்சுடரே!
அன்புருவே! அறிஞர் கோவே!
தேன்றாழும் இன்சொல்லாய்! தெய்வமுறை
உள்ளத்தாய்! செந்த மிழ்த்தொண்டு
யான்றானென் றிலங்கிய நல்நாயகமே!
யாங்கொளித்தாய்? ஞாயந் தானா?

4) முறையறிந்து செயல்புரிந்தாய் முத்தமிழின்
திறமுணர்ந்தாய் முருகன் தாளிற்
சிறைபுகுந்தாய், சுற்றமெலாம் திகைப்புறச்
றதுமுறையோ? செம்மால் உன்றன் [செல்
மிறைதெரிந்த என்நெஞ்சிற் கமைதியெங்ஙன்
நிகழ்த்துவய்யாம்? நெடியோய்! நோன்பின்
துறைசெறிந்த தூயோய்! எம்துயர்களையாத்
தோழமைப்பாங் கிதுவோ? சொல்லாய்?

5) நுண்ணறிவாற் சரஸ்வதிமால் நூலகத்தின்
ஒளிபரப்பி நுடங்கச் செய்தாய்
தண்ணியதீந் தமிழ்வளர்க்கும் கழகமொடு
சங்கங்கட் சார்ந்து தோய்ந்து
திண்ணியநற் றொண்டாற்றிச் செழிப்பித்த
செயலையெலாம் சிறியேன சிந்தை
எண்ணியெண்ணிக் கசிந்துருகும் இடும்பையறி
யாய்இதுநின் இயல்போ? ஐயா!

6) பொதியமென அமைந்துலகிற் புரிபவெலாம்
புகழ்கமழப் புரிந்தாய், நன்பொன்
நிதியமெனக் குடியோம்பி நேர்ந்தாரின்
நிலையுயர்த்த நிமலா! எம்மின்
விதிவயத்தால் உனைப்பிரிந்து மெலிகின்றோம்
வேந்தே! எம் மெலிவு நீங்கத்
துதிபுரிந்து போற்றுகிறோம் சோதிவடி
வேலாகித் துணைசெய் வாயே!

வாழ்க நின்புகழ்! வளர்க நின்னருள்!

---

# ஓர் அறிவிப்பு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கமாகத் திகழும் கரந்தைப் புலவர்கல்லூரி கோடை விடுமுறைக்குப் பின் 26—6—1980ஆம் நாளன்று திறக்கப் பெறவிருக்கின்றது. இக்கல்லூரியில் 1980—81 ஆம் ஆண்டு முதல் இள. இல, (பி.லிட்,) பட்டப்படிப்பின் காலவரையறை மூன்றாண்டுகளாகும். இவ் யாண்டு முதல் மேனிலைக்கல்வி (+ 2) பயின்று அரசுத் தேர்வில் வெற்றி பெற்றவரும் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் (P. U. C.) வெற்றிபெற்றவரும் பி. லிட். பட்ட வகுப்பில் சேரும் தகுதி பெற்றவராவர்.

கல்விக்கட்டணம் ஓராண்டுக்கு ரூ. 183/- ஆகும். இதனை மூன்று பருவங்களில் செலுத்துதல் சாலும். தமிழக அரசு கல்வித்துறை விதிகள் 92ன்படி சலுகைகளுக்குரியோருக்குச் சலுகைகள் அளிக்கப்பெறும். கல்விக்கட்டணத்துடன் பல்கலைக் கழகப் பதிவுக் கட்டணமாக ரூ' 25/-ம் மெட்ரிக்குலேசன் கட்டணம் ரூ. 10/-ம்செலுத்துதல் வேண்டும். இவையன்றிச் சேர்க்கைக் கட்டணமும், தனிக்கட்டணங் (Special Fees)களுமுண்டு.

மூன்றாண்டுப் பட்டப் படிப்பாகிய பி.லிட். பயின்று தேர்ச்சி பெற்றவர் தமிழ் எம். ஏ., வகுப்பிலும், பி. எட்., பயிற்சி வகுப்பிலும் சேரலாம். மற்றும், தமிழகஅரசு தேர்வாணைக் குழுத் தேர்வுகள் அனைத்தையும் பி. ஏ., பட்டம் பெற்றவரைப் போன்று எழுதும் தகுதியுமுண்டு.

ஆடவர், மகளிர் இருபாலருக்கும் விடுதி வசதியுண்டு. தமிழக அரசு பிற்பட்டோர் நலத்துறையினர் அரிசன நலத்துறையினர் வழங்கும் உதவித் தொகைகள் பெற பரிந்துரை செய்யப்பெறும்.

சேர விரும்புவோர் கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொள்க. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சை – 613002.

பொழிற்றொண்டர்.